மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்.

முன்னிலை:– **திருமதி.C.M. அமராவதி, ML.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நடுவர், செய்யூர்.

2026 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31– ம் நாள் திங்கட்கிழமை

**MC. No.9/2020**

**CNR NO – TNCG16-000770-2020**

1. திருமதி. ரசூல் பாத்திமா, வயது.40,

த/பெ. அன்சாரி, க/பெ. ஜெயிலாபுதீன்

2. மைனர். ரேஷ்மா, வயது.15,

த/பெ. ஜெயிலாபுதீன்,

மைனர் குழந்தை 2 வது மனுதாரர்களின் பாதுகாவலர் மற்றும் கார்டியனுமான அவர்களின் தாயாரான 1 வது மனுதாரர் திருமதி. ரசூல்பாத்திமா.

பள்ளிவாசல் தெரு, கடப்பாக்கம் கிராமம் மற்றும் அஞ்சல், செய்யூர் வட்டம், காஞ்சிபுரம் மாவட்டம். ..மனுதாரர்கள்.

//எதிர்//

ஜெயிலாபுதீன், வயது.43,

த/பெ. வி.கே. ஷேக் முகமது,

47 எ, காந்தி மெயின் ரோடு,

திருத்தணி நகரம் மற்றும் வட்டம்

திருவள்ளுவர் மாவட்டம். ...எதிர்மனுதாரர்.

இவ்வழக்கு 27.12.2019 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திரு. ம. தமிழ்மாறன், திரு. M. புகழேந்தி, திரு. V. செல்வகுமார், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. சந்தானம், ஆகியோர்கள் ஆஜராகியும், இவ்வழக்கின் கோப்பினை ஆராய்ந்தும், பரிசீலனை செய்தும், மனுதாரர் தரப்பு வாதங்களை கேட்டறிந்தும் இன்று இந்நீதிமன்றம் இறுதியாக வழங்கும்.

## தீர்ப்புரை

**1.** இந்த மனுவானது வாழ்க்கை பொருளுதவி வழங்க கோரி மனுதாரர் தரப்பில் குற்றவியல் விசாரணை முறை சட்ட பிரிவு 125-ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வழக்கில் மனுதாரர் தரப்பில் மனுவில் தெரிவிப்பது யாதெனில்:–**

**2.1.** முதல் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 12.04.1998 அன்று மரக்காணம் ஜி.டி.எஸ் திருமண மண்டபத்தில் திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் போது 1 வது மனுதாரருக்கு 45 சவரன் தங்க நகைகள், ஏ.சி. பிரிட்ஜ், வாஷிங்மிஷின், இருசக்கர வாகனம் போன்ற அனைத்து வகையான சீர்வரிசைப் பொருட்கள் கொடுக்கப்பட்டது. இருவரின் திருமண வாழ்க்கையில் பாசில் என்ற மகன் 28.01.1999 ல் பிறந்தார். அவர் தற்போது B.Sc. முடித்துள்ளார். 2 வது மைனர் மனுதாரர் 20.12.2004 ல் பிறந்தார். 2 வது மனுதாரர் பிறந்தவுடன் 1 வது மனுதாரரை, எதிர்மனுதாரர் சரிவர கவனிக்காமல் குடும்பத்தின் மீது அக்கறையில்லாமல் இருந்து, தினமும் குடித்துவிட்டு வந்து குடிபோதையில் 1 வது மனுதாரரை அடித்து உதைத்து உள்ளார். அதனால் 1 வது மனுதாரருக்கு உடல் முழுவதும் காயங்கள் ஏற்பட்டது. மேலும் 1 வது மனுதாரர் பெண் என்பதாலும் 2 வது மைனர் மனுதாரர்களின் நலன் கருதி எதிர்மனுதாரர் செய்து வந்த எல்லா துன்பங்களையும் சகித்துக்கொண்டும், எதிர்மனுதாரரின் செயல்களை பொறுத்துக்கொண்டும் குடும்பம் நடத்தி வந்தார். இந்நிலையில் எதிர்மனுதாரர் 1 வது மனுதாரரின் நகைகளை வாங்கி அடகு வைத்து அந்த பணத்தில் குடித்துவிட்டு 1 வது மனுதாரரை அடித்து துன்புறுத்தி வந்தார். இது சம்மந்தமாக 1 வது மனுதாரர் திருத்தணி காவல் நிலையத்தில் 10.04.2011 அன்று புகார் கொடுக்கப்பட்டு, சி.எஸ்.ஆர் மனு எண். 290/2011 பதிவு செய்யப்பட்டது.

**2.2.** எதிர்மனுதாரர் புகாரின் பேரில் காவல் நிலையத்தில் ஆஜராகி இனி நான் எந்த விதமான தகராறும் செய்யமாட்டேன் என்றும், நல்லமுறையில் குடும்பம் நடத்துவேன் என்றும் தெரிவித்து, 1 வது மனுதாரரை வீட்டிற்கு அழைத்து சென்றுள்ளார். அதன் பிறகு எதிர்மனுதாரர் அடிக்கடி 1 வது மனுதாரரை தன்னை காவல் நிலையத்திற்கு அழைத்து கேவலப்படுத்திவிட்டதாக கூறி குடித்துவிட்டு வந்து 1 வது மனுதாரரை அடித்து துன்புறுத்தி வந்தார். ஏப்ரல் மாதம் 2011 ல்

1வது மனுதாரரை எதிர்மனுதாரர் பலமாக தாக்கி அவரின் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மூன்று தையல்கள் போடப்பட்டது. இந்த அனைத்து செயல்களையும் பொறுத்துக்கொண்டு 1வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்தி வந்துள்ளார்.

**2.3**. எதிர்மனுதாரரின் தாயார் உறாமீனாபீ மற்றும் எதிர்மனுதாரரின் சகோதரி நபீசா ஆகியோரும் 1வது மனுதாரருக்கு சிறு சிறு தொல்லைகள் கொடுத்து 1வது மனுதாரரையும் 2வது மனுதாரரையும் வீட்டை விட்டு துரத்தினார்கள். 1வது மனுதாரர் தற்றோது 2வது மைனர் மனுதாரருடன் தன் தந்தையின் வீட்டில் அவரது பராமரிப்பில் கடப்பாக்கத்தில் வாழ்ந்து வருகிறார். மனுதாரர்களுக்கு வேண்டிய செலவினங்களுக்கான மருத்துவ செலவு 2 வது மைனர் மனுதாரர்களுக்கான கல்வி செலவுகள் மற்றும் இதர செலவுகள் அனைத்தையும் 1வது மனுதாரரின் பெற்றோர்களே செய்து வருகிறார்கள்.

**2.4**.தற்போது 2வது மைனர் மனுதாரர் கடப்பாக்கத்தில் உள்ள ஜி.வீ.ஆர். மெட்ரிக்குலேஷன் பள்ளியில் படித்து வருகிறார். இதுநாள் வரை எதிர்மனுதாரர், மனுதாரர்கள் மீது எந்தவிதமான அக்கறையும் கொள்ளாமல் அவர்களின் பராமரிப்புக்கு தேவையான வசதிகளையும் ஏற்படுத்தி கொடுக்காமல் இருந்து வந்துள்ளார். கடந்த 23.04.2013 முதல் மனுதாரர்கள் இருவரும் தங்களை தாங்களே ஜீவனம் செய்து கொள்ள போதிய வசதியுடையவர்கள் அல்லர். எதிர்மனுதாரர் சொந்தமாக திருத்தணி காமராஜர் மார்க்கெட்டில் கடை எண். 1 ல் அரிசி மற்றும் மளிகை வியாபாரம் செய்து அதன் மூலம் மாதம் ரூ.30,000/- வரை சம்பாதிக்கிறார். மேலும் எதிர்மனுதாரருக்கு திருத்தணி டவுன் 47எ காந்தி ரோட்டில், 3 வது தெருவில் சொந்தமாக 4 வீடுகள் உள்ளது. அதனை எதிர்மனுதாரர் வாடகைக்கு விட்டு அதன்மூலம் மாதம் ரூ.80,000/- வரை வருமானம் பெறுகிறார். மேலும் திருத்தனி காந்தி மெயின்ரோட்டில் எதிர்மனுதாரருக்கு சொந்தமாக 2 வீடுகள் உள்ளது. அதனுடைய மதிப்பு சுமார் ரூ.2,00,00,000/- பெறும்.

**2.5.** எதிர்மனுதாரர் 1வது மனுதாரரின் சட்டப்படியான கணவர் என்பதாலும் 2வது மைனர் மனுதாரர்களின் தந்தை என்பதாலும் அவர்களை சவரட்சணை செய்யவேண்டிய கடமை எதிர்மனுதாரரையே

சாரும். எனவே, கடந்த ஏப்ரல் மாதம் 2013 ம் ஆண்டு முதல் மனு தாக்கல் செய்த நாள் வரை கடந்த கால ஜீவனாம்ச தொகையை எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு செலுத்த கடமைப்பட்டவர் ஆவார்.

**2.6**. எனவே, 1 வது மனுதாரருக்கு மாதம் ரூ. 15,000/− 2 வது மைனர் மனுதாரர்களுக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.3,000/− ஜீவனாம்சமாகவும், இருவருக்கும் சேர்த்து ஆடை மற்றும் மருத்துவ செலவுகளுக்காக வருடத்திற்கு மொத்தமாக ரூ.50,000/−ம் 2 வது மைனர் மனுதாரர்களின் கல்விச் செலவாக வருடத்திற்கு ரூ.30,000/− ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வழங்க வேண்டி மனுதாரர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவிப்பது யாதெனில்:−</u>

**3.1.** மனுதாரர் பிராதில் கூறிய அனைத்து அம்சங்களும், குற்றச்சாட்டுகளும் பொய்யானவை. அந்த விவரங்கள் இந்த வழக்கிற்காக மனுதாரரால் பொய்யாக ஜோடனை செய்யப்பட்டவை.

**3.2**. எதிர்மனுதாரருக்கும், 1 வது மனுதாரருக்கும் திருமணம் நடந்த நாள் முதல் 1 வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழாமல் தொடர்ந்து அவரது பெற்றோர் விட்டிலேயே வாழ்ந்து வந்துள்ளார். இதனால் எதிர்மனுதாரும், அவரது பெற்றோர்கள் மற்றும் குடும்ப பெரியோர்கள் அறிவுருத்தியும், மனுதாரர் கேட்காமல் அவரது பெற்றோர் வீட்டிலேயே வசித்து வந்துள்ளார். இந்நிலையில் முதல் குழந்தை பிரசவத்திற்காக சென்ற 1 வது மனுதாரர், குழந்தை பிறந்தவுடன் சுமார் 3 மாதக் காலம் மட்டுமே எதிர்மனுதாரருடன் வாழ்ந்து பின்னர் அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்று சுமார் 4 வருடங்கள் கழித்து தான் எதிர்மனுதாரர் வீட்டிற்கு வந்தார். திரும்பவும் மனுதாரர் 2 வது முறை கருவுற்று அதன் பிரசவத்திற்கு தனது பெற்றோர் வீட்டிற்கு சென்று 2 மாத கைக்குழந்தையுடன் வந்து சுமார் 1 1/2 வருடங்கள் மட்டுமே எதிர்மனுதாரருடன் இருந்து விட்டு மீண்டும் எந்தவிதமான முகாந்திரமும் இன்றி, அவரது பெற்றோர் வீட்டிற்கு சென்றுள்ளார்.

**3.3.** எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி, எதிர்மனுதாரரும், அவரது பெற்றோர்கள் குடும்ப உறவினர்கள் ஒவ்வொரு முறை அழைத்து வரும்போது 6 மாதம் அல்லது 8 மாதம் இருந்துவிட்டு திரும்பவும், தனது

பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவார். இந்நிலையில் எந்தவிதமான தவறும் செய்யாமல், 1வது மனுதாரர் எதிர்மனுதாரர் மீது திருத்தணி காவல் நிலையத்தில் 2 முதல் 3 முறை பொய் புகார் கொடுத்துள்ளார். மேலும் 1வது மனுதாரரின் தந்தையார் எதிர்மனுதாரரை பலமாக தாக்கியுள்ளார்.

**3.4.** 1வது மனுதாரரின் குடும்பத்தார்கள் அண்ணன் காஜா, மற்றும் அவரது தம்பி பாபு ஆகியோர்கள் எதிர்மனுதாரரை கட்டையால் அடித்து தாக்கியுள்ளார்கள். எதிர்மனுதாரரின் மூத்த மகன் பாசில் என்பவர் 3 கல்லூரி நண்பர்களுடன் வந்து எதிர்மனுதாரரை பலமாக தாக்கி அசிங்கமான வார்த்தைகளால் பேசியுள்ளார். எதிர்மனுதாரர் பாதுகாப்பிற்காக காவல் நிலையத்தில் புகார் செய்தார். இது விஷயமாக திருத்தணி, ஜமாத்தில் மனு கொடுத்து விசாரணைக்கு வந்த போது எதிர்மனுதாரர் மாமனார், மனைவி மகன் மகள் 2 மைத்துனர்கள் மனைவியின் 2 உறவினர்கள் அனைவரும் ஜமாத்தின் எந்த முடிவுக்கும் கட்டுப்படாமல், ஜமாத் முன்னிலையில் எதிர்மனுதாரரின் மூத்த மகன் பாசில் என்பவர் எதிர்மனுதாரரை பலமாக தாக்கியுள்ளார்.

**3.5.**1 வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விரும்பவில்லை. எதிர்மனுதாரர்,1வது மனுதாரருக்கும், குழந்தைகளுக்கும் மாதம் தவறாமல் ரூ. 15,000/— செலவுக்காகவும், அவர்கள் படிப்பு செலவிற்காக எதிர்மனுதாரர் ரூ.35,000/—, ரூ.37,000/— மற்றும் ரூ. 50,000/— என்று பணம் வங்கி மூலம் அனுப்பி வருகிறார்.

**3.6.** எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு தேவையான அனைத்து சவரட்சனைகளையும் நல்ல விதமாக செய்து வந்துள்ளார். எதிர்மனுதாரர் மனுதாரரை எந்தக் காலத்திலும் எந்த விதமான துன்புறுத்தலும் செய்ததில்லை. மேலும் 1வது மனுதாரர் சில நபர்களின் தவறான ஆலோசனை மற்றும் துர்போதனையின் பேரில் எதிர்மனுதாரரிடம் வீணான சண்டையிட்டு, எதிர்மனுதாரரை நிராகரித்து மனுதாரர் தன் இஷ்டம் போல் வாழ வேண்டும் என்று எண்ணி, அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டார். மனுதாரர் எதிர்மனுதாரரை பிரிந்து தன்னிச்சையாக சந்தோழமாக வாழ்ந்து வருகிறார். எதிர்மனுதாரரும் அவரது பெற்றோர்களும், உறவினர்களும் 1 வது மனுதாரரின் பெற்றோரின் வீட்டிற்கு சென்று சமாதானம், பஞ்சாயத்து செய்தும், 1வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக

இல்லை என்று கூறி நிராகரித்து வருகிறார். இருப்பினும், எதிர்மனுதாரர் கடந்த நான்கு வருடங்களாக, 1வது மனுதாரர் அவரது குறைகளை மாற்றிக்கொண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வார் என்று காத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் 1வது மனுதாரர் தனது அடாவடி பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளாமல், எதிர்மனுதாரரை நிராகரித்து வருகிறார்.

**3.7.** எதிர்மனுதாரர் மனுதாரரிடம் எந்தவித சண்டைச் சச்சரவும் இட்டதில்லை. 1வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் இருந்த வரை நல்ல உணவையும், நல்ல உடைகளையும் மனைவி என்ற முறையில் எந்த குறையும் இன்றி, எதிர்மனுதாரர் கணவராகவும், குழந்தைகளுக்கு நல்ல தகப்பனாராகவும் இருந்து அவரது பொறுப்பை நல்ல முறையில் செய்து வந்தார். 1வது மனுதாரருக்கு எதிர்மனுதாரரை ஆரம்ப காலக்கட்டத்தில் இருந்தே பிடிக்கவில்லை. அதனால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யான சங்கதிகளை கூறி இந்த ஜீவனாம்ச வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**3.8.** மனுதாரர் மனுவில் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் எதுவும் இந்த எதிர்மனுதாரரால் மனுதாரருக்கு ஏற்படவில்லை. 1வது மனுதாரர், குழந்தையை அழைத்துக்கொண்டு தனியாக பிரிந்து அவரது பெற்றோர் விட்டில் வசித்து வருவதால் எதிர்மனுதாரர் பெருத்த மனஉளைச்சலுடன் தனிமையில் வசித்து வருகிறார். மனுதாரர் அவரின் உறவினர்களின் தவறான பரிந்துரையின் பேரில் பொய்யான காரணங்களைக்கூறி, மேற்படி வழக்கை தாக்கல் தாக்கல் செய்துள்ளார்.

**3.9.** மனுவில் குறிப்பிட்டுள்ள ஜீவனாம்சத் தொகையை பெறுவதற்கு 1வது மனுதாரருக்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது. ஒரு சட்டப்படியான மனைவி என்ற முறையில் 1வது மனுதாரர், எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டியது அவரின் கடமை. எதிர்மனுதாரர் மீது எந்த வித தவறும் இல்லாமல் மனுதாரர் வேண்டுமென்றே பிரிந்து வாழ்ந்து வருகிறார். இந்நிலையில் 1வது மனுதாரருக்கு மனுவில் கோரிய பரிகாரம் எதுவும் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல. எதிர்மனுதாரர் பெயரில் எந்தவித அசையும், அசையா சொத்துக்கள் எதுவும் கிடையாது. மனுதாரர்களை எதிர்மனுதாரர்

எந்நேரமும் பாதுகாக்கவும், பராமரிக்கவும் அவர்களுடன் சேர்ந்து வாழவும் தயாராக உள்ளார்.

**3.10**. 1வது மனுதாரரை எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ வேண்டி பலமுறை பஞ்சாயத்து பேசியும், மனுதாரர் வந்து குடும்பம் நடத்த தவறிவிட்டார். இருந்தபோதிலும் எதிர்மனுதாரர், மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளார். எனவே, மேற்படி ஜீவனாம்ச மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. மேலும் வழக்கிற்கான காரண, காரியங்கள் பொய்யானவை. எனவே, மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**4.** வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பொருண்மை யாதெனில் மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் வழங்க வேண்டுமா அல்லது வழங்க தேவையில்லையா என்பதேயாகும்?

**5.** மனுதாரர்கள் தரப்பில் முதல் மனுதாரர் திருமதி. ரசூல் பாத்திமா ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். முதல் மனுதாரர் தரப்பில் 1 முதல் 8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் ஜெயிலாபுதீன் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் எந்த விதமான ஆவண சாட்சியங்கள் இல்லை.

**6.** முதல் மனுதாரரின் வாய்மொழி சாட்சியங்களை வைத்து பார்க்கும் பொழுது முதல் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் 12.04.1998 அன்று பெரியோர்கள் சம்மதத்துடன் 45 சவரன் தங்க நகைகள் மற்றும் ஏசி. பிரிட்ஜ், வாஷிங்மிஷின், இருசக்கர வாகனம் போன்ற அனைத்து வகையான சீர்வரிசைப் பொருட்கள் கொடுக்கப்பட்டது. எதிர்மனுதாரருக்கும் 1வது மனுதாரருக்கும் ஏற்பட்ட திருமண வாழ்க்கையில் 28.01.1999 ல் பிறந்த பாசில் என்ற மகன் உள்ளதாகவும், அவருக்கு கடந்த 2024 ம் ஆண்டு திருமணம் செய்து வைத்ததாகவும், அதற்கான முழு செலவுகளையும் 1வது மனுதாரரும், அவரது பெற்றோர்களும் செய்ததாகவும், 2வது மனுதாரர் 20.12.2004 ல் பிறந்தவுடன் 1வது மனுதாரரை எதிர்மனுதாரர் சரிவர கவனிக்காமல் குடும்பத்தின் மீது அக்கறையில்லாமல் இருந்து வந்ததோடு, தினமும்

குடித்துவிட்டு வந்து குடிபோதையில் 1வது மனுதாரரை அடித்து உதைத்து உடல் முழுவதும் காயங்களை ஏற்படுத்தியதாகவும், எதிர்மனுதாரர் செய்த எல்லா துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு குடும்பம் நடத்தி வந்ததாகவும், அதனால் 1வது மனுதாரர் எதிர்மனுதாரர் மீதும் அவரது குடும்பத்தார் மீதும் திருத்தணி காவல் நிலையத்தில் கடந்த 10.04.2011 ல் புகார் கொடுத்ததாகவும், அதனால் தினமும் எதிர்மனுதாரர் 1வது மனுதாரரை குடித்துவிட்டு வந்து அடித்து துன்புறுத்தியதாகவும், ஏப்ரல் மாதம் 2011 ல் 1வது மனுதாரரை எதிர்மனுதாரர் பலமாக தாக்கி அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டு மூன்று தையல்கள் போடப்பட்டதாகவும், மேலும் எதிர்மனுதாரர் அவரது தாயார் ஹமீனாபீ மற்றும் அவரது சகோதரி நபீசா, ஆகியோர்களின் தூண்டுதலின் பேரிலும் அனைவரும் சிறு சிறு தொல்லைகள் கொடுத்து 1வது மனுதாரரை துன்புறுத்தி வீட்டை விட்டு துரத்தியுள்ளார்கள்.

**7.** தற்போது 1வது மனுதாரர் அவரது தந்தையின் வீட்டில் கடப்பாக்கத்தில் வாழ்ந்து வருவதாகவும், மேலும் மனுதாரர்களுக்கு வேண்டிய இதர செலவுகள் அனைத்தையும் 1வது மனுதாரர்களின் பெற்றோர்கள் கவனித்து வருவதாகவும், தற்போது 2வது மனுதாரர் வித்தியாசாகர் கல்லூரியில் B.Com படித்து முடித்துவிட்டு அதற்கான முழு செலவுகளையும் அவரும் அவரது பெற்றோரும் செய்து வருவதாகவும், எதிர்மனுதாரர் மனுதாரர்கள் மீது எந்த விதமான அக்கறையும் கொள்ளாமல் அவர்களின் பராமரிப்புக்கு தேவையான அடிப்படை வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்காமல் எதிர்மனுதாரர் ஆடம்பரமாக வாழ்ந்து வருவதாகவும், எதிர்மனுதாரர் சொந்தமாக திருத்தணி காமராஜர் மார்க்கெட்டில் அரி மற்றும் மளிகை வியாபாரம் செய்து அதன் மூலம் ரூ.30,000/- வரை வருமானம் பெறுவதாகவும், எதிர்மனுதாரருக்கு திருத்தணி டவுன் 47 எ காந்தி ரோட்டில், 3 வது தெருவில் சொந்தமாக 4 வீடுகள் உள்ளது. அதனை எதிர்மனுதாரர் வாடகைக்கு விட்டு அதன்மூலம் மாதம் ரூ.80,000/- வரை வருமானம் பெறுகிறார் என்றும், மேலும் திருத்தணி காந்தி மெயின்ரோட்டில் எதிர்மனுதாரருக்கு சொந்தமாக 2 வீடுகள் உள்ளது. அதனுடைய மதிப்பு சுமார் ரூ.2,00,00,000/- பெறும் எனவும் தெரிவித்து எதிர்மனுதாரரிடமிருந்து 1வது மனுதாரருக்கு மாதம் ரூ.15,000/- ம், 2வது மனுதாரருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.3,000/-

ஜீவனாம்சமாகவும், இருவருக்கும் சேர்த்து ஆடை மற்றும் மருத்துவ செலவுகளுக்காக வருடத்திற்கு மொத்தமாக ரூ. 50,000/– ம் 2வது மனுதாரரின் கல்விச் செலவாக வருடத்திற்கு ரூ. 30,000/– ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ஜீவனாம்சமாக அளிக்க உத்தரவிட வேண்டும் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**8.** எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரர் திரு. ஜெயீலாபுதீன் என்பவர் எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது நீதிமன்ற சாட்சியத்தில், மனுதாரர்களுக்கு தேவையான அனைத்து சவரட்சனைகளையும் நல்ல விதமாக செய்து வந்ததாகவும், எதிர்மனுதாரர் மனுதாரரை எந்தக் காலத்திலும் எந்த விதமான துன்புறுத்தலும் செய்ததில்லை என்றும், மேலும் 1வது மனுதாரர் சில நபர்களின் தவறான ஆலோசனை மற்றும் துர்போதனையின் பேரில் எதிர்மனுதாரரிடம் வீணான சண்டையிட்டு, எதிர்மனுதாரரை நிராகரித்து மனுதாரர் தன் இஷ்டம் போல் வாழ வேண்டும் என்று எண்ணி, அவரது தாயார் வீட்டிற்கு சென்றுவிட்டதாகவும், மனுதாரர் எதிர்மனுதாரரை பிரிந்து தன்னிச்சையாக சந்தோழமாக வாழ்ந்து வருவதாகவும், எதிர்மனுதாரரும் அவரது பெற்றோர்களும், உறவினர்களும் 1 வது மனுதாரரின் பெற்றோரின் வீட்டிற்கு சென்று சமாதானம், பஞ்சாயத்து செய்தும், 1வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ தயாராக இல்லை என்று கூறி நிராகரித்து வருகிறார் என்றும், இருப்பினும், எதிர்மனுதாரர் கடந்த நான்கு வருடங்களாக, 1வது மனுதாரர் அவரது குறைகளை மாற்றிக்கொண்டு எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வார் என்று காத்துக் கொண்டிருப்பதாகவும் 1வது மனுதாரர் தனது அடாவடி பழக்க வழக்கங்களை மாற்றிக்கொள்ளாமல், எதிர்மனுதாரரை நிராகரித்து வருகிறார் என்றும் தெரிவித்துள்ளார்.

**9.** மேலும் எதிர்மனுதாரர் 1வது மனுதாரர் எதிர்மனுதாரருடன் இருந்த வரை நல்ல உணவையும், நல்ல உடைகளையும் மனைவி என்ற முறையில் எந்த குறையும் இன்றி, எதிர்மனுதாரர் கணவராகவும், குழந்தைகளுக்கு நல்ல தகப்பனாராகவும் இருந்து அவரது பொறுப்பை நல்ல முறையில் செய்து வந்ததாகவும், 1வது மனுதாரருக்கு எதிர்மனுதாரரை ஆரம்ப காலக்கட்டத்தில் இருந்தே பிடிக்கவில்லை என்பதனால் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பம் இல்லாமல்

மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக பொய்யான சங்கதிகளை கூறி இந்த ஜீவனாம்ச வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10.** மேலும் 1வது மனுதாரரின் வாய்மொழி சாட்சியத்தை வைத்துப் பார்க்கும் பொழுது, கடந்த 12.04.1998 அன்று திருமணம் நடைபெற்றது என்பது ம.சா.ஆ.1ன் மூலம் நிரூபனமாகிறது. மேலும் இந்த திருமணம் இருதரப்பிலும் ஒத்துக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேலும் முதல் மனுதாரரும் எதிர்மனுதாரரும் கணவன் மனைவி என்ற முறையில் வாழ்ந்து வந்துள்ளதாகவும், அவர்களின் இல்லற வாழ்க்கையின் மூலம் பாசில் என்ற மகனும், 2வது மனுதாரரான ரேஷ்மா என்பவரும் பிறந்துள்ளார்கள் என்பதும் தெரிய வருகிறது. இச்சங்கதிகளை ஒத்துரைத்து எதிர்மனுதாரர் தனது எதிருரையிலும் நீதிமன்ற சாட்சியத்திலும் தெரிவித்துள்ளார்.

**11.** மேலும் எதிர்மனுதாரர் குடித்துவிட்டு வந்து 1வது மனுதாரரை அடித்து துன்புறுத்தியதால் 1வது மனுதாரர் 10.04.2011 ல் திருத்தணி காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக தெரிவித்துள்ள போதிலும், அந்த புகாரை இந்நீதிமன்றத்தில் சான்று பொருள் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. மேலும் எதிர்மனுதாரர் திருத்தணி காமராஜர் மார்க்கெட்டில் கடை எண். 1 ல் அரிசி மற்றும் மளிகை வியாபாரம் செய்து அதன் மூலம் மாதம் ரூ. 30,000/– வரை சம்மாதிப்பதாக தெரிவித்துள்ள போதிலும் அதற்கான ஆவணச்சான்றுகள் எதையும் 1வது மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

**12.** மேலும் எதிர்மனுதாரர் தன்னுடைய பதிலுரையிலும், நீதிமன்ற சாட்சியத்திலும் 1ம் மனுதாரரின் தகப்பனார் தன்னை தகாத வார்த்தைகளால் திட்டி, பலமாக தாக்கியதாகவும், 1வது மனுதாரரின் குடும்பத்தார்கள் அண்ணன் காஜா, மற்றும் அவரது தம்பி பாபு ஆகியோர்கள் தன்னை கட்டையால் அடித்ததாகவும், தனது மகன் பாசில் என்பவர் அவரது கல்லூரி நண்பர்கள் 3 பேருடன் வந்து தன்னை பலமாக தாக்கி அசிங்கமான வார்த்தையால் பேசிவிட்டு சென்றதனால், தனது பாதுகாப்பிற்காக காவல் நிலையத்தில் புகார் அளித்ததாக தெரிவித்துள்ள போதிலும், அந்த புகாரை எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் சான்று பொருள் ஆவணமாக குறியீடு செய்யவில்லை.

**13.** எதிர்மனுமாரர் 1 வது மனுதாரருக்கும் அவரது குழந்தைகளுக்கும் மாதம் தவறாமல் செலவுக்காக ரூ. 15,000/- ம், பிள்ளைகளின் படிப்பு செலவிற்காக ரூ.35,000/- மும், ரூ. 37,000/- மற்றும் ரூ. 50,000/- பணம் வங்கி மூலம் அனுப்பி வைத்ததாக தெரிவித்து அந்த வங்கி கணக்கு ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் சமர்பிக்க எதிர்மனுதாரர் தவறவிட்டார். மேலும் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு வேண்டிய அனைத்து சவரட்சனைகளையும் நல்ல விதமாக செய்து வருவதாக தெரிவித்துள்ளார். 1 வது மனுதாரர் தங்களின் அனைத்து சவரட்சனைகளையும் தங்களின் பெற்றோர்கள் கவனத்து வருவதாக தெரிவித்துள்ளார்.

**14**. மேலும் 1 வது மனுதாரர் தனது நீதிமன்ற சாட்சியத்தில் தனது மூத்த மகன் பாசில் என்பவருக்கு தற்போது திருமணமாகிவிட்டது என்று தெரிவித்துள்ள போதிலும், மகன் தனது தாயை பாராமரிக்க கடமைப்பட்டவர். ஆனால் 1 வது மனுதாரர் தற்போது பாசில் என்பவருடன் தான் வசிக்கவில்லை என்றும், திருமணம் ஆகாத தனது மகளுடன் தனது பெற்றோர் வீட்டில் வசித்து வருவதாக தனது குறுக்கு விசாரணையில் தெரிவித்துள்ளார்.

**15.** மேலும், எதிர்மனுதாரருக்கும் முதல் மனுதாரருக்கும் திருமண உறவில் ஒரு பரஸ்பர உறவு முறை இல்லை என்பதும், முதல் மனுதாரரை கொடுமைப்படுத்தி, முதல் மனுதாரருக்கும், 2 ம் மனுதாரருக்கும் எந்த வித சவரட்சணையும் செய்யாமல் இருந்து வந்துள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் முதல் மனுதாரரும் எதிர்மனுதாரரும் தற்போது இருக்கும் கருத்து வேறுபாட்டால் பிரிந்து வாழ்ந்து வருவதாகவும் தெரிய வருகிறது.

**16.** எது எப்படி இருப்பினும் எதிர்மனுதாரர் முதல் மனுதாரரின் கணவன் என்ற முறையிலும், 2 ம் மனுதாரரின் தந்தை என்ற முறையிலும், வாழ்ந்து வருகிறார்கள். 2 ம் மனுதாரரின் கல்வி மற்றும் பராமரிப்பு செலவு ஆகியற்றிற்கும், மேலும் 2 வது மனுதாரர் தற்போது திருமணம் வயது உள்ளதாகவும் அவர்களுக்கு சவரட்சனை செய்ய வேண்டிய கடமை எதிர்மனுதாரருக்கு உள்ளது. இவ்வழக்கின் தன்மை மற்றும் சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு, மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் வாழ்க்கை பொருளுதவி வழங்கியே ஆக வேண்டும் என்று இந்நீதிமன்றம்

முடிவுக்கு வருகிறது.

**17**. மேலும் முதல் மனுதாரர் எதிர்மனுதாரரின் மனைவி என்ற முறையிலும், 2 ம் மனுதாரர் எதிர்மனுதாரரின் பிள்ளை என்ற முறையிலும் இதுவரை வாழ்ந்து வருகிறார்கள். 1வது மனுதாரருக்கு மாதம் ரூ.15,000/– ம், 2வது மனுதாரருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.3,000/– ஜீவனாம்சமாகவும், இருவருக்கும் சேர்த்து ஆடை மற்றும் மருத்துவ செலவுகளுக்காக வருடத்திற்கு மொத்தமாக ரூ. 50,000/– ம் 2வது மனுதாரரின் கல்விச் செலவாக வருடத்திற்கு ரூ. 30,000/– ம் எதிர்மனுதாரர் தர வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

**18**. இருப்பினும், முதல் மனுதாரர் தனது பெற்றோர் வீட்டில் வசித்து வருவதாக தனது மனுவிலும், வாய்மொழி சாட்சியங்களிலும் தெரிவித்துள்ளார். மேலும் 2வது மனுதாரர் தனது கல்லூரி படிப்பை முடித்து வீட்டில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, மனுதாரர்களுக்கு வேண்டிய உணவு, உடை, உறைவிடம், மருத்துவ செலவு மற்றும் கல்விச் செலவு ஆகியவற்றிற்காக எதிர்மனுதாரர் மாதம் ரூ. 15,000/– கொடுக்க கடமைப்பட்டவர் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**19.** மனுதாரரின் சொத்து மதிப்பு மற்றும் வருமானம் எதிர்மனுதாரரின் சொத்து மதிப்பு மற்றும் வருமானம் பற்றிய விவரங்கள் அடங்கிய பிரமாண வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், எதிர்மனுதாரர் மாதம் ரூ. 20,000/– வருமானம் ஈட்டுபவராக இந்த நீதிமன்றம் கருதுகிறது. எதிர்மனுதாரருக்கு ஒரு திருமணமான மகன் இருப்பதாலும் மகள் ரேஷ்மா என்பவர் கல்லூரி படிப்பை முடித்திருப்பதாலும் மனுதாரரின் இரு வாரிசுகளும் மனுதாரரை பேணி காக்க கடமைப்பட்டுள்ளனர். மேலும் மனுதாரரின் மகன் மற்றும் மகள் மைனர்கள் இல்லை. அவர்கள் வேலைக்கு சென்று சம்பாதிக்கும் சூழ்நிலையில் உள்ளனர். இருந்தாலும் எதிர்மனுதாரர், மனுதாரர் மற்றும் அவருடைய மகன் மற்றும் மகளை பேணிக்காத்து அவர்களுக்கு சவரட்சணை செய்ய கடமைப்பட்டுள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட எதிர்மனுதாரர், மனுதாரரின் மகன் மற்றும் மகள் அவர்களின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு

எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு ரூ. 15,000/– கொடுக்கக் கடமைப்பட்டவர்.

**20**. இறுதியாக, இந்த மனுவானது அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்களுக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சமாக இந்த மனு தாக்கல் செய்யப்பட்ட தேதி முதல் மாதம் ரூ.15,000/– கொடுக்க வேண்டும் என்றும், மேற்படி தொகையை பிரதி ஆங்கில மாதம் 10–ம் தேதிக்குள் கொடுக்க வேண்டும் என்றும் பா.கு.பா.ச. பிரிவு 144–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு மீண்டும் என்னால் பிழைத்திருத்தம் செய்த பின்னர் 2026 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

AMARAVATHI

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by AMARAVATHI
Location: Cheyyur
Date: 2026.08.31 19:26:38 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
செய்யூர்.

பின் இணைப்பு:-

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள்:-</u>**

ம.சா.1. திருமதி. ரசூல் பாத்திமா

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-</u>**

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | 1வது மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் நடந்த திருமண அழைப்பிதழ் |
| ம.சா.ஆ.2 | 1வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டையின் நகல் |
| ம.சா.ஆ.3 | 2 வது மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் |
| ம.சா.ஆ.4 | 2 வது மனுதாரரின் பிறப்பு சான்றிதழ் நகல் |
| ம.சா.ஆ.5 | எதிர்மனுதாரர் அவரது வழிக்கறிஞர் மூலம் 1வது மனுதாரருக்கு கொடுத்த 15.07.2019 ம் தேதியிட்ட அறிவிப்பு |
| ம.சா.ஆ.6 | 05.08.2019 ம் அன்று 1வது மனுதாரர் கொடுத்த பதில் அறிவிப்பு |

| | |
|---|---|
| | |
| ம.சா.ஆ.7 | அறி1விப்பு எதிர்மனுதாரரின் வழக்கறிஞருக்கு சார்வு செய்வதை காட்டும் அசல் அஞ்சல் ஒப்புகை அட்டை |
| ம. சா.ஆ.8 | திருமணத்தின் போது 1 வது மனுதாரரும் எதிர்மனுதாரரும் எடுத்துக்கொண்ட புகைப்படம். |

**<u>எதிர் மனுதாரர் தரப்பு சாட்சிகள்-</u>**

எ.ம.சா1.- திரு. ஜெயிலாபுதீன்

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சான்று ஆவணங்கள் -இல்லை</u>**

AMARAVATHI

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by AMARAVATHI
Location: Cheyyur
Date: 2026.08.31 19:26:46 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர் நீதிமன்றம்,
செய்யூர்.